செ.வெ.எண்-13 நாள்-09.10.2019

# அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்ட முகாம்கள் 11.10.2019 அன்று நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஏழாவது கட்டமாக **அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வட்டங்களில்,** வட்டத்திற்கு இரண்டு கிராமத்திலும் அம்மா திட்ட முகாம் **11.10.2019** அன்று வட்டாட்சியர்கள் தலைமையில் பின்வருமாறு நடைபெற உள்ளது.

**அரியலூர் வட்டத்தில்** ஒட்டக்கோவில், ஓரியூர் ஆகிய கிராமங்களிலும், **உடையார்பாளையம் வட்டத்தில்** சாத்தம்பாடி, வானதிரையன்பட்டிணம் ஆகிய கிராமங்களிலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் வருவாய்த்துறையின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றில் தகுதி பெற்ற மனுக்களின் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**